**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**
**TIRUVANNAMALAI.**
**S.C. NO. 27/2015**
**PW18**

| | | |
|---|---|---|
| Name | : | சந்திரசேகரன் |
| Father's/Husband's Name | : | பெருமாள் |
| Village | : | |
| Taluk/District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 24.04.2025
A1 to 3 present.

**முதல் விசாரணை**

நான் தமிழ்நாடு துறையில் காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து ஓய்வுபெற்றேன். நான் ஏற்கனவே திருவண்ணாமலை மாவட்டம், வேட்டவலம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது 22.05.2013 அன்று அந்நிலைய குற்ற எண். 67/2013 சட்டப்பிரிவு 294(b), 323,324 ,506(2) @302 இதசன் படி வழக்கு கோப்பை ஏற்கனவே புலன் விசாரைணை செய்த ஆய்வாளர் சாந்தலிங்கம் மேற்படி வழக்கின் கோப்பை காவல் நிலையத்தில் ஒப்படைத்தார். அதை நான் மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். இந்த வழக்கில் சாட்சிகளை விசாரிக்க ஏற்கனவே புலன் விசாரணை செய்த ஆய்வாளரிடம் கூறியதுபோலவே என்னிடமும் கூறியதால் நான் தனியாக வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை. மேலும் இந்த வழக்கில் 26.05.2013 அன்று வேலூர் சத்துவாச்சாரி தடய அறிவியல் ஆய்வகம் சென்று உதவி இயக்குநர் திரு. ரவிசங்கர் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு பாண்டிச்சேரி ஜிப்மர் அரசு மருத்துவமனைக்கு சென்று பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் அம்பிகா பிரசாத் பட்ரா அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றே பிரேத பரிசோதனை சான்றிதழ் பெற்றேன். அன்றே விழுப்புரம்அரசு மருத்துவமனைக்கு சென்று மரு. மனோஜ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இந்த வழக்கில் என் புலன் விசாரணையை முடித்து அரசு

வழக்கறிஞர் கருத்துரை பெற்று எதிரிகள் மீது சட்டப்பிரிவு 302 r/w 34 IPC ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் என் புலன் விசாரணையை எனக்கு முன் விசாரணை செய்த ஆய்வாளர் விட்டுச் சென்ற நிலையில் இருந்து மேல் விசாரணை செய்தேன். விழுப்புரம் மருத்துவமனை மருத்துவர் மனோஜ் என்பவரிடம் விபத்து பதிவேடு நகல் பெற்று ஆய்வு செய்து விசாரணை செய்தேன். அதில் இறந்துபோன காயம்பட்ட சார்லசை சிகிச்சைக்கு அழைத்து வந்த வேளாங்கண்ணி என்று தெரியவந்தது. அந்த வேளாங்கண்ணி என்பவரை விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். ஆனால் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. விபத்து பதிவேட்டு நகலில் காயம்பட்டவரை 2 தெரிந்த ஆண் நபர்கள் தன் வீட்டில் தாக்கியதாக பதிவு உள்ளது என்றால் சரிதான். அந்த 2 ஆண் நபர்கள் யார் என்று விசாரணை செய்தேனா என்றால் விசாரிக்கவில்லை . விழுப்புரம் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு செல்வதற்கு முன் வேறு எந்த மருத்துவமனைக்காவது சிகிச்சைக்கு சென்றார்களா என்பது குறித்து நான் விசாரணை செய்யவில்லை . பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில் சார்லசுக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை குறித்த அறிக்கைகள் அல்லது விபத்து பதிவேடு நகலை வாங்கினேனா என்றால் வாங்கவில்லை. பிரேத பரிசோதனை செய்த மருத்துவரை விசாரணை செய்தபோது ஆயுதங்களை காட்டி இத்தகைய ஆயுதங்களால் மேற்படி காயங்கள் ஏற்படுமா என்று நான் விசாரணை செய்யவில்லை. மருத்துவமனையில் இருந்து பெறப்பட்ட இறப்பு அறிக்கையை தாக்கல் செய்யவில்லை . விழுப்புரம் அரசு மரு. மனோஜ் என்பவரை நான்தான் விசாரணை செய்து அவரது வாக்குமூலத்தை கைப்பட பதிவு செய்தேன். ஜீப்மர் மருத்துவமனையின் மருத்துவர் அம்பிகா பிரசாத் பட்ரா மற்றும் அறிவியல் ஆய்வாளர் ரவிசங்கர் ஆகியோரது குவிமுச 161 வாக்குமூலங்களை நான் எழுதவில்லை. நான் தாக்கல் செய்த 3குற்ற இறுதி அறிக்கையில் 31.03.2013 அன்று பால்ராஜிம் , சார்லசும் ஒருவரையொருவர் தாக்கிக்கொண்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இது சம்மந்தமாக நான் விசாரிக்கவில்லை. நான் பாண்டிச்சேரி ஜீப்மர் மருத்துவமனையில் சார்லசின் விபத்து பதிவேட்டு நகலை வாங்கினேன் என்றும், அதில் அடையாளம் தெரியாத நபர்கள் என்று இருந்ததால் அது வழக்கிற்கு பாதகமாக இருக்கும் என்று மறைத்துவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. அதேபோல் வேட்டவலம் மருத்துவமனையிலும் சார்லசின் விபத்து பதிவேட்டு நகலை வாங்கினேன் என்றும், அது வழக்கிற்கு பாதகமாக இருந்ததால் அதை மறைத்துவிட்டேன் என்று

சொன்னால் சரியல்ல. நான் சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் யாரையும் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது புலன் விசாரணை சந்தேகத்திற்குரியது என்றால் சரியல்ல. நான் எந்த சாட்களையும் விசாரிக்காமல் எந்த புலன்விசாரணையையும் மேற்கொள்ளாமல் இயந்திரகதியாக எதிரிகள் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்துவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. கைபற்றப்பட்ட வழக்கு சொத்துகளை கைரேகை நிருபர்களிடம் அனுப்பவில்லை என்றால் சரிதான். எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மதமில்லை என்றால் சரியல்ல. அடையாளம் தெரியாத எதிரிகள் யாரோ தாக்கிவிட்ட வழக்கில் திட்டமிட்டு எதிரிகள் மீது பொய் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல .

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/– B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.